

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.12.2025) ஈரோடு அரசு பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் அரியலூர், தர்மபுரி, ஈரோடு, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், பெரம்பலூர், இராமநாதபுரம், நீலகிரி, திருவாரூர், தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, விழுப்புரம் ஆகிய 16 மாவட்டங்களைச் சேர்ந்த 4,824 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தலா 30 விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய 6,890 டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரண தொகுப்புகளை வழங்கினார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் சு.முத்துசாமி, மு.பெ. சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தியூர்.ப.செல்வராஜ், கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.சி.சந்திரகுமார், ஏ.ஜி.வெங்கடாசலம், உள்ளிட்ட அரசு அலுவலர்கள் வீரர், வீராங்கனைகள் இருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.12.2025) கோயம்புத்தூர் மாவட்டம் ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் நடைபெற்ற விழாவில் 9.67 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட உலகத்தரத்திலான அதிநவீன ஹாக்கி மைதானம் உள்பட 162.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 107 திட்டப் பணிகளை திறந்து வைத்து, 31.72 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 10,626 பயனாளிகளுக்கு 136.44 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் சு.முத்துசாமி, மு.பெ.சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தியூர்.ப.செல்வராஜ், கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் வி.சி.சந்திரகுமார், ஏ.ஜி. வெங்கடாசலம், உள்ளிட்ட அரசு அலுவலர்கள் வீரர், வீராங்கனைகள் இருந்தனர்.

## ஈரோட்டில், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 6,000 ‘கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ வழங்கும் விழா!

# தன்னம்பிக்கையுடன் இருந்தால், ஆடுகளத்தில் உங்கள் வெற்றியை யாராலும் தடுக்க முடியாது!

## விளையாட்டு வீரர்– வீராங்கனையர் இடையே துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

ஈரோடு, ஜன. 1 –

**ஈரோட்டில் நடைபெற்ற அரசு விழாவில், ஈரோடு உள்ளிட்ட 14 மாவட்டங்களின் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு, சுமார் 6,000 கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்டை உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகளுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கி, வீரர் வீராங்கனையரை வாழ்த்திப் பேசினார்.**

**அப்போது அவர், “தமிழ்நாட்டு வீரர்கள் சாதிக்க, நம்முடைய அரசு என்றும் துணையாக இருக்கும். ஆகவே, விளையாட்டில் உங்கள் முழுகவனத்தைச் செலுத்துங்கள். தன்னம்பிக்கையுடன் இருந்தால், ஆடுகளத்தில் உங்கள் வெற்றியை யாராலும் தடுக்க முடியாது. இதையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு இந்த கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்டைப் பயன்படுத்துங்கள்” என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:**

விளையாட்டுத் துறையின் சார்பாக, இன்றைக்கு ஈரோட்டுக்கு வருகை தந்து, 14 மாவட்டங்களைச் சேர்ந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ‘கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். முதலாவதாக இங்கு வந்திருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என் புத்தாண்டு வாழ்த்துகளையும், பொங்கல் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மகிழ்ச்சி – புத்துணர்ச்சி

எப்பொழுது ஈரோட்டிற்கு வந்தாலும், ஒரு தனி உணர்ச்சியும் மகிழ்ச்சியும் புத்துணர்ச்சியும் ஏற்படும். அதற்கு முழுகாரணம் இது பெரியார் பிறந்த மண் என்பதுதான். இங்கு வந்திருக்கக்கூடிய விளையாட்டு வீரர்கள் எடுக்கின்ற பயிற்சி, போட்டியில் உங்களை வெற்றிபெறச் செய்வதற்காகத் துணை நிற்கிறது. அதேபோன்று பேரறிஞர் அண்ணாவும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் இந்த ஈரோட்டு மண்ணில்தான் பெரியார் அவர்களிடம் பயிற்சி எடுத்தார்கள். அவர்களுக்கெல்லாம் பயிற்சி கொடுத்த மண் இந்த ஈரோடு மாவட்டம். அவர்களிடத்தில் எடுத்த பயிற்சிதான் இன்றைக்குத் தமிழ்நாட்டை வெற்றி பெற வைத்துக் கொண்டிருக்கிறது, தொடர்ந்து வெற்றி பெற வைக்கும்.

அந்தப் பயிற்சியைப் பாடமாகக் கொண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செயல்படுவதால்தான், இன்றைக்கு இந்தியாவிலேயே நம்முடைய தமிழ்நாடு மிகவும் பாதுகாப்பான ஒரு மாநிலமாகவும், முன்னேறிய மாநிலமாகவும் சிறப்பாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. இன்றைக்குப் பல்வேறு துறைகளில் தமிழ்நாடு எப்படி முதன்மையான மாநிலம் என்று பெருமையோடு இருக்கிறதோ, அதேபோல நாம் அனைவரும் இன்னும் பெருமைப்படும் அளவிற்கு விளையாட்டுத் துறையிலும் இந்தியாவிலேயே தலைசிறந்த மாநிலமாகத் தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது.அதற்கு நம்முடைய அரசின் முயற்சி மட்டுமே காரணமல்ல.

### மேடையே ஒரு சாட்சி

இங்கு வந்திருக்கக்கூடிய விளையாட்டு வீரர்கள், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து விளையாட்டு வீரர்கள், அவர்களின் பெற்றோர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் என இவர்கள் அனைவருமே இதற்குக் காரணம். நம் அரசின் முயற்சி, விளையாட்டு வீரர்களின் பயிற்சி - இவைதாம் இன்றைக்குத் தமிழ்நாட்டிலிருந்து ஏராளமான வீரர்களையும் வீராங்கனைகளையும் உருவாக்கி வருகின்றன. அதற்கு இங்கிருக்கக்கூடிய இந்த மேடையே ஒரு சாட்சி.

இந்த ஈரோடு மண்ணைச் சேர்ந்த, சாதனைகள் பல படைத்த இரண்டு வீராங்கனைகள் இங்கே மேடையில் அமர்ந்திருக்கிறார்கள். ஜிம்னாஸ்டிக்ஸ் வீராங்கனை தங்கை சிநேகா வந்திருக்கிறார். அவர் எவ்வளவு தன்னம்பிக்கையுடன் பேசினார் என்பதற்கு, அவர் விளையாட்டுப் பயிற்சி எடுத்த போது அவருக்குக் கிடைத்த அனுபவமே முக்கியக் காரணம்.இன்றைக்குப் பேசும் பொழுது அவர் தன்னுடைய ஊரான கரட்டுப்பாளையத்திற்கு நான் வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார். நிச்சயமாக அடுத்த முறை வரும் பொழுது தங்கை சிநேகாவின் வீட்டிற்கு நான் சும்மா வரமாட்டேன், உணவருந்துவதற்காக வருவேன்.



ஈரோடு பெரிய கரட்டுப்பாளையத்திலிருந்து புறப்பட்டு, இன்றைக்கு இந்தியாவின் முக்கியமான ஜிம்னாஸ்டிக்ஸ் வீராங்கனைகளில் ஒருவராகத் திகழ்ந்து கொண்டிருக்கிறார் தங்கை சிநேகா அவர்கள். அவருக்கும் அவருடைய சகோதரருக்கும், தொலைக்காட்சி வழியாகப் பார்த்துக் கொண்டிருக்கக்கூடிய அவருடைய பெற்றோர்கள் அனைவருக்கும் நாம் கைதட்டல் மூலமாக வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வோம்.

### எஸ்.டி.ஏ.டி (SDAT) மாணவி

இன்னொரு கூடுதல் பெருமை, அவர் எஸ்.டி.ஏ.டி (SDAT) மாணவி என்பது. இது எங்களது துறைக்குக் கிடைத்த பெருமை. அவர் இன்னும் பல சாதனைகளைப் படைப்பார். தங்கை நித்யா ராமராஜ் அவர்களும் இங்கு வந்திருக்கிறார்கள். இவரும் நம் துறையின் எஸ்.டி.ஏ.டி விடுதி மாணவி என்பதில், எங்களுக்குக் கூடுதல் பெருமை. இன்றைக்கு சர்வதேச அளவில் தடகளத்தில் சிறந்து விளங்கிக் கொண்டிருக்கிறார் சகோதரி நித்யா ராமராஜ் அவர்கள். மற்ற வீரர்களுக்கு, குறிப்பாக, அழைத்து கௌரவப்படுத்துவது, உங்கள் அனைவருக்கும் ஒரு உந்து சக்தியாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். அதுமட்டுமல்ல, உங்களிடமிருந்து இன்னும் நிறைய நித்யா ராமராஜ்களும் சிநேகாக்களும் உருவாக வேண்டும் என்கிற நோக்கத்தில்தான் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம்.

### 13,000 ஊராட்சிகள்

கடந்த ஆண்டு இந்தத் திட்டத்தைக் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கினோம். கிட்டத்தட்ட 13,000 ஊராட்சிகளுக்குக் கொண்டு சேர்த்தோம். இந்த விளையாட்டு உபகரணத் தொகுப்பில் கிட்டத்தட்ட 30 வகையான விளையாட்டுகளை விளையாட முடியும். இதற்கு கிராமங்களில் மிகப்பெரிய வரவேற்பு கிடைத்தது. அதனைத் தொடர்ந்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இது கிராமங்களுக்கு மட்டுமல்ல, நகரங்களுக்கும் கொண்டு சேர்க்க வேண்டும் என்று திட்டத்தை விரிவாக்கம் செய்தார்கள். அதன் அடிப்படையில்தான் கடந்த மாதம் முதல் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கத் தொடங்கினோம். அந்த வகையில், இன்றைக்கு 14 மாவட்டங்களுக்குச் சுமார் 6,000 தொகுப்புகள் இந்த நிகழ்ச்சியின் மூலமாகச் சென்றடைய உள்ளன.

அனைவரும் விளையாட்டுத் திடலுக்கு வர வேண்டும், அனைவரும் விளையாட வேண்டும். படிப்பு எவ்வளவு முக்கியமோ அதே அளவுக்கு உடற்பயிற்சியும் விளையாட்டும் முக்கியம். அப்பொழுதுதான் உடலும் உள்ளமும் உறுதியாக இருக்கும். இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விளையாட்டுத் துறையின் வளர்ச்சிக்காக ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார். ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒரு மினி ஸ்டேடியம் தயாராகி வருகிறது.

### ஹாக்கி விளையாட்டுத் திடல்

இன்றைக்குக் காலையில் கூட கோயம்புத்தூர் மாநகராட்சியில் 10 கோடி ரூபாய் மதிப்பில், புதிய சர்வதேச அளவிலான ஹாக்கி விளையாட்டுத் திடலைத் திறந்து வைத்து விட்டு, இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறேன். ஒரு மாதத்திற்கு முன்பு உலகக் கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டி, முதல் முறையாக இந்தியாவில் நடைபெற்றது. அதிலும் முதன்முறையாகத் தமிழ்நாட்டில் சென்னை மற்றும் மதுரையில் நடத்திக் காட்டினோம். இனி தேசிய மற்றும் சர்வதேச அளவிலான ஹாக்கி போட்டிகள் கோவையிலும் அடிக்கடி நடக்கும். நம்முடைய அரசு பொறுப்பேற்றது முதல், தொடர்ந்து ஏராளமான சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளை நடத்தி வருகிறோம். ஸ்குவாஷ் உலகக் கோப்பை, வேர்ல்ட் சர்பிங் லீக், ஏசியன் கப் ஹாக்கி சாம்பியன் ஷிப் ஆகியவற்றை நடத்தியிருக்கிறோம்.

சென்னை செஸ் கிராண்ட் மாஸ்டர்ஸ் போட்டியைச் சிறப்பாக நடத்திக் காட்டினோம். முதன்முறையாக ‘ஃபார்முலா-4’ இரவு நேரப் பந்தயத்தை, சென்னையில் வெற்றிகரமாக நடத்தினோம். சமீபத்தில், ஆண்கள் ஜூனியர் ஹாக்கி உலகக் கோப்பையையும் சென்னை மற்றும் மதுரையில் நடத்தினோம். இதற்காக மதுரையில் சர்வதேச தரத்திலான ஹாக்கி விளையாட்டுத் திடலை ஆறே மாதங்களில் 20 கோடி ரூபாய் செலவில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அமைத்துக் கொடுத்தார்கள்.

### எங்களுக்கு ஒரு இலக்கு

‘தமிழ்நாடு சாம்பியன்ஸ் பவுண்டேஷன்’ மூலமாகப் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு அரசு உயரிய ஊக்கத் தொகையை வழங்குகிறது. ஆனால், போட்டிக்குச் செல்வதற்கு முன்பே, ஒரு வீரருக்குத் தேவையான பயிற்சி, பயணச் சீட்டு, உணவு போன்றவற்றுக்கு உதவுவதற்காகவே இந்த அறக்கட்டளை தொடங்கப்பட்டது. அதன் மூலமாகவும் வீரர்களுக்குத் தொடர்ந்து நிதியுதவி வழங்குகிறோம். அதுமட்டுமல்ல, 3 சதவிகித இட ஒதுக்கீட்டின் கீழ், விளையாட்டுத் துறையினருக்கான அரசு வேலைவாய்ப்பையும் வழங்குகிறோம்.

இதுவரை எந்த அரசிலும் இல்லாத அளவிற்கு முதன்முறையாகக் கடந்த ஆண்டு 100 விளையாட்டு வீரர்களுக்கு அரசு மற்றும் பொதுத்துறையில் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு ஒரு இலக்கு கொடுத்துள்ளார்கள் - 100 அல்ல, 125 விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலைவாய்ப்பை உறுதி செய்ய வேண்டும் என்பதே அந்த இலக்கு.

ஒவ்வொரு ஆண்டும் முதலமைச்சர் கோப்பை (CM Trophy) விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இதில் பரிசுத் தொகையாக மட்டும் ஒவ்வொரு ஆண்டும் 30 கோடி ரூபாய் அளவிற்கான நிதியை முதலமைச்சர் ஒதுக்கியுள்ளார்.

நம்முடைய திராவிட மாடல் ஆட்சியை ‘விளையாட்டுத் துறையின் பொற்காலம்’ என்று நாம் மட்டும் கூறவில்லை, இன்றைக்கு ஒட்டுமொத்த இந்தியாவும் பிற மாநிலங்களும் நம்மைப் புகழ்ந்து கொண்டிருக்கின்றன. ‘விளையாட்டை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலம்’ (Best State for Promoting Sports) என்ற விருதைத் தொடர்ந்து நம்முடைய தமிழ்நாடு அரசுக்கு ‘தி ஹிந்து ஸ்போர்ட் ஸ்டார்’, சி.ஐ.ஐ. (CII),எஃப்.ஐ.சி.சி.ஐ. (FICCI) போன்ற அமைப்புகள் வழங்கி வருகின்றன.

**நம்முடைய முதலமைச்சர் அவர்கள், இது கிராமங்களுக்கு மட்டுமல்ல, நகரங்களுக்கும் கொண்டு சேர்க்க வேண்டும் என்று திட்டத்தை விரிவாக்கம் செய்தார்கள். அதன் அடிப்படையில்தான் கடந்த மாதம் முதல் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கத் தொடங்கி-னோம். அந்த வகையில், இன்றைக்கு 14 மாவட்டங்களுக்குச் சுமார் 6,000 தொகுப்புகள் இந்த நிகழ்ச்சியின் மூலமாகச் சென்றடைய உள்ளன.**

இந்த வெற்றிப்பயணம் தொடர வேண்டும். தமிழ்நாட்டு வீரர்கள் சாதிக்க நம்முடைய அரசு என்றும் துணையாக இருக்கும். ஆகவே, விளையாட்டில் உங்கள் முழு கவனத்தைச் செலுத்துங்கள். தன்னம்பிக்கையுடன் இருந்தால் ஆடுகளத்தில் உங்கள் வெற்றியை யாராலும் தடுக்க முடியாது. இதையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு இந்தக் கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்டைப் பயன்படுத்துங்கள்.

இந்த உபகரணங்களைப் பத்திரமாகப் பராமரியுங்கள். மாவட்ட ஆட்சியர்கள், நகராட்சி ஆணையர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள் இதனை முறையாகப் பயன்படுத்துவதைத் தொடர்ந்து ஆய்வு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்டைப் பெற்றுக்கொண்ட அனைவருக்கும் என் வாழ்த்துகளைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்திப் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் சு. முத்துசாமி, மு.பெ.சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் செல்வராஜ், கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் சந்திரகுமார், ஏ.ஜி.வெங்கடாசலம், செந்தில் பாலாஜி, மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யா மிஸ்ரா ஐ.ஏ.எஸ்., விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி ஐ.ஏ.எஸ்., மாநகராட்சித் துணை மேயர் செல்வராஜ், மாநகராட்சி ஆணையர் அர்பித் ஜெயின் ஐ.ஏ.எஸ்., மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார், தடகள வீராங்கனை நித்யா, ஜிம்னாஸ்டிக் வீராங்கனை சிநேகா உள்பட பலரும் கலந்துகொண்டனர்.




**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (30.12.2025) ஈரோடு அரசு பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் அரியலூர், தர்மபுரி, ஈரோடு, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், பெரம்பலூர், இராமநாதபுரம், நீலகிரி, திருவாரூர், தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, விழுப்புரம் ஆகிய 16 மாவட்டங்களைச் சேர்ந்த 4,824 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தலா 30 விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய 6,890 டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரண தொகுப்புகளை கொண்டு செல்லும் வாகனங்களை கொடியசைத்து வழியனுப்பி வைத்தார்.**

பெண்கள் விளையாட்டில் சாதிக்க வேண்டும் என்பதற்கு, இவர்கள் இருவரும் முன்மாதிரியாகத் திகழ்கிறார்கள். தங்கைகள் இருவருக்கும் நாம் கைதட்டல் மூலமாக வாழ்த்துகளைத் தெரிவிப்போம்.

இன்றைக்கு இந்தக் ‘கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்’ உபகரணங்களை விளையாட்டு வீரர்களை அழைத்து வழங்குகிறோம். அவர்களை